

கம்பன் புகழ் வாழ்க !　　　　கன்னித் தமிழ் வாழ்க !

சீதா கல்யாணம்

★

இராசிபுரம்

ஞானம்பாள்—சந்திரகாசன்

திருமண அன்பளிப்பு

24—5—64

★

கம்பன் புகழ் வாழ்க !   கன்னித் தமிழ் வாழ்க !

சீதா கல்யாணம்

165

★

இராசிபுரம்

ஞானம்பாள்-சந்திரகாசன்

திருமண அன்பளிப்பு

★

சடையன் பண்ணை

வேலூர் :: சேலம்.



ரயில்வே தொழிலாளர் மின்விசை அச்சகம், பொன்மலை

திருமண வாழ்த்து

சங்க இலக்கியம் போன்ற முல்லைப் பூக்கள்
சரஞ்சரமாய் ஒளிர்கின்ற விதானத்தின்கீழ்,
துங்கமுறு மணத் தவிசில் வீற்றிருக்கும்
தூய்மை ஆர் **ஞானம்பாள்** உள்ளப்பூவில்
மங்கலமாய்ப் பொலிகின்ற செல்வ! அன்பின்
மாண்புணர் **சந்திரகாச**! வாழி! நீவிர்
பொங்கு மகிழ்வொடு விளங்கும் கோலம் கண்டு
பூரித்தோம்; வாழ்த்துகிறோம்; வாழ்மின்! வாழ்மின்!

நற் புகழ் சால் மணமக்காள்! நீவிர் அன்பாம்
நறுங் கொடியை வளர்த்திடுமின்! காதல் என்னும்
பொற்பு மிகும் புது மலரின் வண்ணம் காண்மின்!
பொலிவார்ந்த பண்பென்னும் கனியை உண்மின்!
சிற்பரன்தன் பேரருளாம் இசையைக் கேண்மின்!
சீர் சான்ற மைந்தர் விளையாடல் காண்மின்!
கற்பனைக்கும் எட்டாத தூய இன்பக்
கடல் விளைக்கும் அமுதாகி வாழ்மின்! வாழ்மின்!

'கற்கண்டோ? நற்கனியோ? மதுர ஆறோ?
கலைமகளின் தவப்பயனோ? உலகம் உண்ட
சிற்பரன்தன் சுவைக் கனவோ?' என்று சான்றோர்
தினந்தோறும் புகழ்ந்தேத்தும் காதை தந்த
விற்பனன்; எம் கவிச்சக்ரவர்த்தி கம்பன்
மேலாய கற்பனையாம் குன்றில் வாழும்
அற்புதன்; மா கடல் வண்ணன்; திருவின் கேள்வன்
அருளினால் பல்லாண்டு பல்லாண்டு வாழ்மின்!

அன்பு மறவா

S.K. இராமராசன்

ட. இராமராசா.

'அற்புத நவரசம் எங்கும் சொட்டிட
ஆக்கிய நின் கவிதை
அத்தனையும் பால்! அத்தனையும் தேன்!
அத்தனையும் அமுதம்!
பொற்புறு நின் கவிதைக் கனி உண்டு,
புலப்பகை வென்றேட்டிப்,
பூரணமாய் இறுமாப்பில் நிறைந்து ஒரு
போதத்து ஒளி பெற்றேம்.
கற்பனை அன்று; எமை ஒப்பவர் இந்தக்
காசினிதனில் இல்லை.
கதியில் உயர்ந்தனம்' என்று அறிவாளர்
களித்திட வாழ்வு தரும்
சிற்பர நாவுக் கரசே! மகிழ்வொடு
திலகம் அணிந்தருளே!
திரை தவழ் பொன்னித் துறை தவழ் கம்பன்
திலகம் அணிந்தருளே!

கடவுள் வணக்கம்.

உலகம் யாவையும் தாம் உளஆக்கலும்,
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார்—அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.

வானின்று இழிந்து, வரம்பு இகந்த
மா பூதத்தின் வைப்பு எங்கும்,
ஊனும் உயிரும் உணர்வும்போல்,
உள்ளும் புறமும் உளன் என்ப—
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்ப, கோல்துறந்து
கானும் கடலும் கடந்து, இமையோர்
இடுக்கண் காத்த கழல் வேந்தே.

அவையடக்கம்

ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று, ஒரு
பூசை, முற்றவும் நக்குபு புக்கென,
ஆசை பற்றி அறையலுற்றேன்—மற்று, இக்
காசு இல் கொற்றத்து இராமன் கதைஅரோ !

அறையும் ஆடரங்கும் பட, பிள்ளைகள்
தறையில் கீறிட, தச்சரும் காய்வரோ ?
இறையும் ஞானம் இலாத என் புன் கவி,
முறையின் நூல் உணர்ந்தாரும், முனிவரோ?

இம்பர் நாட்டில் செல்வம் எல்லாம்
எய்தி, அரசு ஆண்டு இருந்தாலும்,
உம்பர் நாட்டில் கற்பகக் கா
ஓங்கும் நீழல் இருந்தாலும்,
செம்பொன் மேரு அனைய புயத்
திறல் சேர் இராமன் திருக் கதையில்,
கம்ப நாடன் கவிதையில்போல்,
கற்றோர்க்கு இதயம் களியாதே.

சரயு நதி

கல்லிடைப் பிறந்து, போந்து,
கடலிடைக் கலந்த நீத்தம்,
' எல்லை இல் மறைகளாலும்
இயம்ப அரும் பொருள் ஈது 'என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகி,
துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல் பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல், பரந்தது அன்றே.

தாது உகு சோலைதோறும்,
சண்பகக் காவுதோறும்,
போது அவிழ் பொய்கைதோறும்,
புதுமணல்-தடங்கள்தோறும்,
மாதவி வேலிப் பூக
வனம்தொறும், வயல்கள்தோறும்,
ஓதிய உடம்புதோறும்
உயிர் என, உலாயது அன்றே.

கோசல நாடு

தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளை கண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட,
தேம் பிழி மகர யாழின்,
வண்டுகள் இனிது பாட,—
மருதம் வீற்றிருக்கும், மாதோ.

சேல் உண்ட ஒண் கணாரின்
திரிகின்ற செங் கால் அன்னம்,
மால் உண்ட நளினப் பள்ளி,
வளர்த்திய மழலைப் பிள்ளை,
கால் உண்ட சேற்று மேதி
கன்று உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு, துயில, பச்சைத்
தேரை தாலாட்டும்—பண்ணை.

பெருந் தடங் கண் பிறைநுதலார்க்கு எலாம்,
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்,
விருந்தும், அன்றி, விளைவன யாவையே ?

கூற்றம் இல்லை, ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்;
ஆற்ற நல்அறம் அல்லது இலாமையால்,
ஏற்றம் அல்லது, இழிதகவு இல்லையே.

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
ஒண்மை இல்லை, பல் கேள்வி ஓங்கலால்.

அயோத்தி நகரம்

செவ்விய மதுரம் சேர்ந்தன பொருளின்
சீரிய கூரிய தீம் சொல்
வவ்விய கவிஞர் அனைவரும், வடநூல்
முனிவரும், புகழ்ந்தது; வரம்பு இல்

எவ் உலகத்தோர் யாவரும், தவம் செய்து
ஏறுவான் ஆதரிக்கின்ற
அவ் உலகத்தோர், இழிவதற்கு அருத்தி
புரிகின்றது—அயோத்தி மா நகரம்.

நிலமகள் முகமோ! திலதமோ! கண்ணோ!
நிறை நெடு மங்கல நாணோ!
இலகு பூண் முலைமேல் ஆரமோ! உயிரின்
இருக்கையோ! திருமகட்கு இனிய
மலர்கொலோ! மாயோன் மார்பில் நன் மணிகள்
வைத்த பொற் பெட்டியோ! மலரோன்
உலகின் மேல் உலகோ! ஊழியின் இறுதி
உறையுளோ! யாது என உரைப்பாம்?

மன்னவர் தரு திறை அளக்கும் மண்டபம்,
அன்னம் மென் நடையவர் ஆடும் மண்டபம்,
உன்ன அரும் அரு மறை ஓது மண்டபம்,
பன்ன அருங் கலை தெரி பட்டி மண்டபம்.

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே,
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ.

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து, எண் இல்கேள்வி
ஆகும் முதல் திண் பணை போக்கி, அருந் தவத்தின்
சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து,
போகங் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.

தசரதன் அரசியல்

தாய் ஒக்கும் அன்பின்; தவம் ஒக்கும் நலம் பயப்பின்;
சேய் ஒக்கும், முன் நின்று ஒரு செல் கதி உய்க்கும் நீரால்;
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப் புகும்கால், அறிவு ஒக்கும்;—எவர்க்கும், அன்னான்.

வயிர வான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்,
உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிர் இலா உலகினில், சென்று, நின்று, வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்.

'எய்' என எழு பகை எங்கும் இன்மையால்,
மொய் பெருத் தினவு உறு முழவுத் தோளினான்,
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து, இனிது அரசு செய்கின்றான்.

தசரதன் குறை

'அறுபதினாயிரம் ஆண்டும் மாண்டு உற,
உறு பகை ஒடுக்கி, இவ் உலகை ஓம்பினேன்;—
பிறிது ஒரு குறையிலை; என் பின் வையகம்
மறுகுறும் என்பது ஓர் மறுக்கம் உண்டுஅரோ.

'அருந் தவ முனிவரும், அந்தணாளரும்,
வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினார்;
இருந் துயர் உழக்குநர் என் பின் என்பது ஓர்
அருந் துயர் வருத்தும், என் அகத்தை' என்றனன்.

முரசு அறை செழுங் கடை, முத்த மாமுடி,
அரசர்தம் கோமகன் அனைய கூறலும்,
விரை செறி கமல மென் பொகுட்டில் மேவிய
வர சரோருகன் மகன் மனத்தில் எண்ணினான்—

அலைகடல் நடுவண், ஓர் அனந்தன் மீமிசை,
மலை என விழி துயில்வளரும் மா முகில்,
'கொலை தொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பென்' என்று
உலைவுறும் அமரருக்கு உரைத்த வாய்மையே.

அவதாரம்

ஒரு பகல் உலகு எலாம் உதரத்துள் பொதிந்து,
அரு மறைக்கு உணர்வு அரும் அவனை, அஞ்சனக்
கரு முகிற் கொழுந்து எழில் காட்டும் சோதியை,
திரு உறப் பயந்தனள்—திறம் கொள் கோசலை.

ஆசையும், விசும்பும், நின்று அமரர் ஆர்த்து எழ,
வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துற,
பூசமும் மீனமும் பொலிய, நல்கினள்,
மாசு அறு கேகயன் மாது மைந்தனை.

தளை அவிழ் தருவுடைச் சயிலகோபனும்,
கிளையும், அந் தரமிசைக் கெழுமி ஆர்ப்புற,
அளை புகும் அரவினோடு அலவன் வாழ்வுற,
இளையவற் பயந்தனள், இளைய மென் கொடி.

படம் கிளர் பல்தலைப் பாந்தள் ஏந்து பார்
நடம் கிளர்தர, மறை நனி மகிழ்ந்திட,
மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட,
விடம் கிளர் விழியினள், மீட்டும், ஈன்றனள்,

பெயர் சூட்டல்

கரா மலைய. தளர் கைக்கரி எய்த்தே,
'அரா-அணையில் துயில்வோய்!' என, அந் நாள்,
விராவி, அளித்தருள் மெய்ப்பொருளுக்கே,
'இராமன்' எனப் பெயர் ஈந்தனன் அன்றே.

கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப
விரத மறைப் பொருள் மெய்ந்நெறி கண்ட
வரதன், உதித்திடு மற்றைய ஒளியை,
'பரதன்' எனப் பெயர் பன்னினன் அன்றே.

உலக்குநர் வஞ்சகர்; உம்பரும் உய்ந்தார்;
நிலக்கொடியும் துயர் நீத்தனள்; இந்த,
விலக்க அரு மொய்ம்பின் விளங்கு ஒளி நாமம்
'இலக்குவன்' என்ன, இசைத்தனன் அன்றே.

'முத்து உருக்கொண்டு செம் முளரி அலர்ந்தால்
ஒத்திருக்கும் எழிலுடைய இவ் ஒளியால்,
எத்திருக்கும் கெடும்' என்பதை எண்ணு,
'சத்துருக்கன்' எனச் சாற்றினன் நாமம்.

முனிவன் கையடை

தூய மெல் அரியணைப் பொலிந்து தோன்றினன்;
சேய் இரு விசும்பிடைத் திரியும் சாரணர்,
'நாயகன் இவன்கொல்?' என்று அயிர்த்து, நாட்டம் ஓர்
ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினர்.

மடங்கல்போல் மொய்ம்பினன் முன்னர், 'மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறு அமைத்து, தேவரோடு
இடம் கொள் நான்முகனையும் படைப்பென் ஈண்டு'எனத்
தொடங்கிய, துனி உறு, முனிவன் தோன்றினன்.

'நிலம் செய் தவம் என்று உணரின், அன்று; நெடியோய்!என்
நலம் செய் வினை உண்டு எனினும், அன்று; நகர், நீ, யான்
வலம் செய்து வணங்க, எளிவந்த இது, முந்து என்
குலம் செய் தவம்' என்று இனிது கூற, முனி கூறும்:

‘என் அனைய முனிவரரும் இமையவரும்
இடையூறு ஒன்று உடையரானால்,
பல் நகமும் நகு வெள்ளிப் பனிவரையும்,
பாற்கடலும், பதும பீடத்து
அந் நகரும், கற்பக நாட்டு அணி கவரும்
மணி மாட அயோத்தி என்னும்
பொன் நகரும், அல்லாது, புகல் உண்டோ?—
இகல் கடந்த புலவு வேலோய்!

‘இன் தளிர்க் கற்பக நறுந் தேன், இடை துளிக்கும்
நிழல் இருக்கை இழந்து போந்து,
நின்று அளிக்கும் தனிக் குடையின்
நிழல் ஒதுங்கி, குறை இரந்து நிற்ப, நோக்கி,
குன்று அளிக்கும் குல மணித் தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து, நீ கொண்டு
அன்று அளித்த அரசு அன்றோ, புரந்தரன் இன்று
ஆள்கின்றது?— அரச!’ என்றான்.

‘தரு வனத்துள் யான் இயற்றும் தகை வேள்விக்கு
இடையூறா, தவம் செய்வோர்கள்
வெருவரச் சென்று அடர் காம வெகுளி என,
நிருதர் இடை விலக்கா வண்ணம்,
“செரு முகத்துக் காத்தி” என, நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி’ என, உயிர் இரக்கும்
கொடுங் கூற்றின், உளையச் சொன்னான்.

எண் இலா அருந் தவத்தோன் இயம்பிய சொல்
மருமத்தின் எறி வேல் பாய்ந்த
புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தா-
லெனச் செவியில் புகுதலோடும்,

உள் நிலாவிய துயரம் பிடித்து உந்த,
ஆர் உயிர் நின்று ஊசலாட,
'கண் இலான் பெற்று இழந்தான்' என உழந்தான்
கடுந் துயரம்—கால வேலான்.

தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறுந் தாரான்
ஒருவண்ணம் துயரம் நீங்கி,
'படையூற்றம் இலன்; சிறியன் இவன்; பெரியோய்!
பணி இதுவேல், பனி நீர்க் கங்கை
புடை ஊற்றும் சடையானும், நான்முகனும்,
புரந்தரனும், புகுந்து செய்யும்
இடையூற்றுக்கு இடையூருய், யான் காப்பென்:
பெரு வேள்விக்கு எழுக!' என்ருன்.

என்றனன்: என்றலும், முனிவோடு எழுந்தனன், மண்
படைத்த முனி; 'இறுதிக் காலம்
அன்று' என, 'ஆம்' என இமையோர் அயிர்த்தனர்; மேல்
வெயில் கரந்தது; அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன; மீ நிவந்த கொழுங்
கடைப் புருவம் நெற்றி முற்றச்
சென்றன; வந்தது நகையும்; சிவந்தன கண்;
இருண்டன, போய்த் திசைகள் எல்லாம்.

வந்த நம்பியைத் தம்பி தன்னெடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி, 'நல்
தந்தை நீ, தனித் தாயும் நீ, இவர்க்கு;
எந்தை! தந்தனென்; இயைந்த செய்க!' என்ருன்.

வென்றி வாள் புடை விசித்து, மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுருத் தூணி யாத்து, இரு
குன்றம் போன்று உயர் தோளில், கொற்ற வில்
தாங்கினன்—உலகம் தாங்கினன்.

தாடகை வதை

'சூடக அரவு உறழ் சூலக் கையினள்;
காடு உறை வாழ்க்கையள்;—கண்ணில் காண்பரேல்,
ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்!—
"தாடகை" என்பது அச் சழக்கி நாமமே.

'உளப் பரும் பிணிப்பு உறு, உலோபம் ஒன்றுமே
அளப்ப அருங் குணங்களை அழிக்கும் ஆறு போல்,
கிளப்ப அருங் கொடுமைய அரக்கி, கேடு இலா
வளப் பரு மருத வைப்பு அழித்து மாற்றினாள்.'

மாலும், அக் கணம் வாளியைத் தொட்டதும்,
கோல வில் கால் குனித்ததும், கண்டிலர் ;
காலனைப் பறித்து அக் கடியாள் விட்ட
சூலம் அற்று வீழ் துண்டங்கள் கண்டனர்.

சொல் ஒக்கும் கூடிய வேகச்
சுடுசரம், கரிய செம்மல்,
அல் ஒக்கும் நிறத்தினாள்மேல்
விடுத்தலும், வயிரக் குன்றக்
கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது,
அப் புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருள் என, போயிற்று அன்றே!

பொன் நெடுங் குன்றம் அன்னான்,
புகர் முகப் பகழி என்னும்
அங் நெடுங் கால வன் காற்று
அடித்தலும்,—இடித்து, வானில்
கல் நெடு மாரி பெய்யக்,
கடையுகத்து எழுந்த மேகம்,
மின்னெடும் அசனியோடும்
வீழ்வதே போல—வீழ்ந்தாள்!

வேள்வி காத்தல்

'தங்கள் நாயகரின் தெய்வம்
தான் பிறிது இலெ' என்று எண்ணும்
மங்கைமார் சிந்தை போலத்
தூயது; மற்றுங் கேளாய் :
எங்கள் நான்மறைக்கும், தேவர்
அறிவிற்கும், பிறர்க்கும், எட்டாச்
செங் கண் மால் இருந்து மேல்நாள்
செய் தவம் செய்தது அன்றே.

எண்ணுதற்கு, ஆக்க, அரிது இரண்டு-மூன்று நாள்
விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை,
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்,
கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர்.

அகலிகை சாப நீக்கம்.

கறங்கு தண் புனல், கடி நெடுந் தாளுடைக் கமலத்து
அறம் கொள் நாள்மலர்க் கோயில்கள் இதழ்க்கதவு அடைப்ப
பிறங்கு தாமரை வனம் விட்டு, பெடையொடு களி வண்டு
உறங்கு கின்றது ஓர் நறுமலர்ச் சோலை புக்கு, உறைந்தார்,

பள்ளி நீங்கிய, பங்கயப் பழன நல் நாரை,
வெள்ள வாள் களை களைவுறு கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாள் நெடும் கண் நிழல் கயல் எனக் கருதா,
அள்ளி, நாணுறும், அகன் பணை மிதிலை நாடு அணைந்தார்.

வரம்பு இல் வான் சிறை மதகுகள் முழவு ஒலி வழங்க,
அரும்பு நாள்மலர் அசோகுகள் அலர் விளக்கு எடுப்ப,
நரம்பின் நான்ற தேன் தாரை கொள் நறுமலர் யாழின்,
சுரும்பு, பாண் செய, தோகை நின்று ஆடுவ—சோலை.

'இவ் வண்ணம் நிகழ்ந்த வண்ணம் ;
இனி, இந்த உலகுக்கு எல்லாம்
உய்வண்ணம் அன்றி, மற்று ஓர்
துயர் வண்ணம் உறுவது உண்டோ?
மை வண்ணத்து அரக்கி போரில்,
மழை வண்ணத்து அண்ணலே ! உன்
கை வண்ணம் அங்குக் கண்டேன்;
கால் வண்ணம் இங்குக் கண்டேன்.'

மிதிலைக் காட்சி

'மை அறு மலரின் நீங்கி,
யான் செய் மா தவத்தின் வந்து,
செய்யவள் இருந்தாள் ' என்று,
செழு மணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக்
கடிநகர், கமலச் செங் கண்
ஐயனை, ' ஒல்லை வா ' என்று
அழைப்பது போன்றது அம்மா !

ஆதரித்து, அமுதில் கோல் தோய்த்து,
'அவயவம் அமைக்கும் தன்மை
யாது ?' எனத் திகைக்கும் அல்லால்,
மதனற்கும் எழுத ஒண்ணாச்

சீதையைத் தருதலாலே,
திருமகள் இருந்த செய்ய
போது எனப் பொலிந்து தோன்றும்,
பொன் மதில், மிதிலை புக்கார்,

நெய் திரள் நரம்பின் தந்த
மழலையின் இயன்ற பாடல்,
தைவரு மகர வீணை,
தண்ணுமை தழுவித் தூங்க,
கை வழி நயனம் செல்ல,
கண் வழி மனமும் செல்ல,
ஐய நுண் இடையார் ஆடும்
ஆடக அரங்கு கண்டார்.

வாளரம் பொருத வேலும்,
மன்மதன் சிலையும், வண்டின்
கேளோடு கிடந்த நீலச்
சுருளும், செங்கிடையும், கொண்டு,
நீள் இரும் களங்கம் நீக்கி,
நிரை மணி மாட நெற்றிச்
சாளரம்தோறும் தோன்றும்
சந்திர உதயம் கண்டார்,

பொன்னின் சோதி, போதினின் நாற்றம் பொலி பூவின்
தென் உண் தேனின் தீம் சுவை, செஞ்சோல் கவி இன்பம்—
கன்னிம் மாடத்து உம்பரின் மாடே, களி பேடோடு
அன்னம் ஆடும் முன்துறை கண்டு, அங்கு, அயல் நின்ருள்.

'கொல்லும் வேலும், கூற்றமும் என்னும் இவை யெல்லாம்
வெல்லும் வெல்லும்' என்ன மதர்க்கும் விழிகொண்டாள்;
சொல்லும் தன்மைத்து அன்று அது; குன்றும், சுவரும், திண்
கல்லும், புல்லும், கண்டு உருக, பெண் கனி நின்ருள்.

இழைகளும் குழைகளும் இன்ன, முன்னமே,
மழை பொரு கண் இணை மடந்தைமாரொடும்
பழகிய எனினும், இப் பாவை தோன்றலால்,
அழகு எனும் அணியும் ஓர் அழகு பெற்றதே!

எண்ண அரும் நலத்தினாள் இனையள் நின்றுழி,
கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.

பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து,
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்,
வரி சிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்,
இருவரும் மாறிப் புக்கு, இதயம் எய்தினார்.

மருங்கு இலா நங்கையும், வசை இல் ஐயனும்,
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்—
கருங் கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?

பிறை எனும் நுதலவள் பெண்மை என்படும்?—
நறை கமழ் அலங்கலான் நயன கோசரம்
மறைதலும், மனம் எனும் மத்த யானையின்
நிறை எனும் அங்குசம் நிமிர்ந்து போயதே!

'நெருக்கி உள் புகுந்து, அரு நிறையும் பெண்மையும்
உருக்கி, என் உயிரொடும் உண்டு போனவன்
பொருப்பு உறழ் தோள் புணர் புண்ணியத்தது
கருப்பு வில் அன்று; அவன் காமன் அல்லனே!

'பெண்வழி நலனொடும், பிறந்த நாணொடும்,
எண் வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலேன்—
மண் வழி நடந்து, அடி வருந்தப் போனவன்,
கண் வழி நுழையும் ஓர் கள்வனே கொலாம்?

'கரு நாயிறு போல்பவர் காலோடு போய்,
வரு நாள், அயலே வருவாய்;— மனனே!—
பெரு நாள், உடனே, பிரியாது உழல்வாய்;
ஒரு நாள் தரியாது ஒழிவார் உளரோ?

'இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்,
சந்திர வதனமும், தாழ்ந்த கைகளும்,
சுந்தர மணிவரைத் தோளுமே, அல ;
முந்தி, என் உயிரை அம் முறுவல் உண்டதே!'

வண்ண மாலை கை பரப்பி,
உலகை வளைந்த இருள் எல்லாம்
உண்ண எண்ணி, தண் மதியத்து
உதயத்து எழுந்த நிலாக் கற்றை—
விண்ணும் மண்ணும் திசை அனைத்தும்
விழுங்கிக் கொண்ட, விரி நல் நீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன்
புகழ்போல்— எங்கும் பரந்துளதால்.

முனியும் தம்பியும் போய், முறையால் தமக்கு
இனிய பள்ளிகள் எய்தியபின், இருட்
கனியும் போல்பவன், கங்குலும், திங்களும்,
தனியும், தானும், அத்தையலும், ஆயினான்.

'விண்ணின் நீங்கிய மின் உரு, இம் முறை,
பெண்ணின் நல் நலம் பெற்றது உண்டேகொலோ?
எண்ணின், ஈது அலது என்று அறியேன்; இரு
கண்ணினுள்ளும் கருத்துளும் காண்பெனால்.

'நினையாய் ஒரு கால்; நெடிதோ நெறி தான்?
வினவாதவர்பால், விடை கொண்டிலையோ?—
புன மான் அனையாரொடு போயின் என்
மனனே!—எனை நீயும் மறந்தனையோ?

'ஏகும் நல்வழி; அல்வழி என் மனம்
ஆகுமோ? இதற்கு ஆகிய காரணம்,
பாகுபோல் மொழிப் பைந்தொடி, கன்னியே
ஆகும்; வேறு இதற்கு ஐயுறவு இல்லையே!'

எண்ண அரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த,
விண்ணவரும், முனிவர்களும், வேதியரும்,
கரம் குவிப்ப, வேலை என்னும்
மண்ணும் மணி முழவு அதிர, வான் அரங்கில்
நடம் புரி வாள் இரவி ஆன
கண்ணுதல் வானவன், கனகச் சடை விரிந்தா-
லென விரிந்த—கதிர்கள் எல்லாம்.

கொல் ஆழி நீத்து, அங்கு ஓர் குனி வயிரச்
சிலைத் தடக் கைக் கொண்ட கொண்டல்,
எல் ஆழித் தேர் இரவி இளங் கரத்தால்
அடி வருடி அனந்தல் தீர்ப்ப,
அல் ஆழிக் கரை கண்டான்—ஆயிர வாய்
மணி விளக்கம் அழலும் சேக்கைத்
தொல் ஆழித் துயிலாதே, துயர் ஆழி-
யிடைக் கிடந்து துயில்கின்ருனே.

இருந்த குலக் குமரர்தமை, இரு கண்ணும்
முகத்து அழகு பருக நோக்கி,
அருந் தவனை அடி வணங்கி, 'யார் இவர்கள்?
உரைத்திடுமின், அடிகள்!' என்ன,

'விருந்தினர்கள்; நின்னுடைய வேள்வி
காணிய வந்தார்; வில்லும் காண்பார்;
பெரும் தகைமைத் தயரதன்தன் புதல்வர்' என;
அவர் தகைமை பேசலுற்றான்:

இராமன் குலமரபு

'இன் உயிர்க்கும் இன் உயிராய் இரு நிலம் காத்தார் என்று
பொன் உயிர்க்கும் கழலவரை யாம்போலும், புகழ்கிற்பாம்?-
மின் உயிர்க்கும் நெடு வேலோய்!—இவர் குலத்தோன்,மென்புறவின்
மன் உயிர்க்கு, தன் உயிரை மாறாக வழங்கினனால்!

'விரிந்திடு தீவினை செய்த வெவ்விய தீவினையாலும்,
அருங் கடை இல் மறை அறைந்த அறம் செய்தஅறத்தாலும்,
இருங் கடகக் கரதலத்து இவ் எழுத அரிய திரு மேனிக்
கருங்கடலைச் செங் கனி வாய்க் கவுசலை என்பாள் பயந்தாள்.

'தள்ள அரிய பெரு நீதித் தனி ஆறு புக மண்டும்
பள்ளம் எனும் தகையானை, பரதன் எனும் பெயரானை,
எள்ள அரிய குணத்தாலும் எழிலாலும் இவ் இருந்த
வள்ளலையே அனையானை, கேகயர்கோன் மகள் பயந்தாள்.

'தலை ஆய பேர் உணர்வின் கலைமகட்குத் தலைவர் ஆய்,
சிலை ஆயும் தனு வேதம் தெவ்வரைப்போல் பணி செய்ய,
கலை ஆழிக் கதிர்த் திங்கள் உதயத்தில் கலித்து ஓங்கும்
அலை ஆழி என வளர்ந்தார்—மறை நான்கும் அனையார்கள்.

'அலை உருவக் கடல் உருவத்து
ஆண்தகைதன் நீண்டு உயர்ந்த
நிலை உருவப் புய வலியை
நீ உருவ நோக்கு ஐயா!

உலை உருவக் கனல் உமிழ் கண்
தாடகைதன் உரம் உருவி,
மலை உருவி, மரம் உருவி,
மண் உருவிற்று, ஒரு வாளி!

'கோதமன் தன் பன்னிக்கு
முன்னை உருக் கொடுத்தது, இவன்,
போதுவென்றது எனப் பொலிந்த,
பொலங் கழற் கால் பொடி கண்டாய்;
காதல் என் தன் உயிர்மேலும்
இக் கரியோன்பால் உண்டால்;
ஈது, இவன் தன் வரலாறும்,
புயவலியும்' என உரைத்தான்.

வில் ஒடித்தல்

போதகம் அனையவன் பொலிவை நோக்கி, அவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கி, தன்
மாதினை நோக்குவான் மனத்தை நோக்கிய
கோதமன் காதலன் கூறல் மேயினான்:

'உழுகின்ற கொழுமுகத்தின், உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற, புவி மடந்தை திரு வெளிப்பட்டெனை, புணரி
எழுகின்ற தெள் அமுதோடு எழுந்தவளும், இழிந்து ஒதுங்கித்
தொழுகின்ற நல் நலத்துப் பெண் அரசி தோன்றினாள்.

'குணங்களை என் கூறுவது?
கொம்பினைச் சேர்ந்து அவை உய்யப்
பிணங்குவன; அழகு, இவளைத்
தவம் செய்து பெற்றது காண்;

கணங் குழையாள் எழுந்ததற்பின்,
கதிர் வானில் கங்கை எனும்
அணங்கு இழியப் பொலிவு இழந்த
ஆறு ஒத்தார், வேறு உள்ளார்.'

நினைந்த முனி பகர்ந்த எலாம்
நெறி உன்னி, அருந்தவனும்,
புனைந்த சடைமுடி துளக்கி,
போர் ஏற்றின் முகம் பார்த்தான்;
வனைந்தனைய திருமேனி
வள்ளலும், அம் மா தவத்தோன்
நினைந்த எலாம் நினைந்து, அந்த
நெடுஞ் சிலையை நோக்கினன்.

'வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்,
"கொள்" என முன்பு கொடுப்பதை அல்லால்,
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து, இப்
பிள்ளை முன் இட்டது பேதைமை' என்பார்.

தோகையர் இன்னன சொல்லிட, நல்லோர்
ஓகை விளம்பிட, உம்பர் உவப்ப,
மாக மடங்கலும், மால் விடையும், பொன்
நாகமும், நாகமும், நாண நடந்தான்.

ஆடக மால் வரை அன்னது தன்னை,
'தேட அரு மா மணி, சீதை எனும் பொன்
சூடக வால் வளை, சூட்டிட நீட்டும்
ஏடு அவிழ் மாலை இது' என்ன, எடுத்தான்.

தடுத்து இமையாமல் இருந்தவர், தாளில்
மடுத்ததும், நாண் நுதி வைத்ததும், நோக்கார்;
கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்.

பூ மழை சொரிந்தார் விண்ணோர்;
பொன் மழை பொழிந்த மேகம்;
பாம மாகடல்கள் எல்லாம்
பல் மணி தூவி ஆர்த்த;
கோ முனிக் கணங்கள் எல்லாம்
கூறின ஆசி;— 'கொற்ற
நாம வேல் சனகற்கு, இன்று,
நல்வினை பயந்தது' என்று.

'தயரதன் புதல்வன்' என்பார்;
'தாமரைக் கண்ணன்' என்பார்;
'புயல் இவன் மேனி' என்பார்;
'பூவையைப் பொருவும்' என்பார்;
'மயல் உடைத்து உலகம்' என்பார்;
'மானிடன் அல்லன்' என்பார்:
'கயல் பொரு கடலுள் வைகும்
கடவுளே காணும்' என்பார்.

'நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்;
கொம்பினைக் காணும்தோறும்
குரிசிற்கும் அன்னதே ஆம்;
தம்பியைக் காண்மின்!' என்பார்;
'தவம் உடைத்து உலகம்' என்பார்;
'இம்பர், இந் நகரில் தந்த
முனிவனை இறைஞ்சும்' என்பார்.

'நாண் உலாவு மேருவோடு நாண் உலாவு பாணியும்,
தூண் உலாவு தோளும், வாளியூடு உலாவு தூணியும்,
வாள் நிலாவின் நூல் உலாவும் மாலை மார்பும், மீளவும்
காணல் ஆகும்? ஆகின், ஆவி காணல் ஆகுமேகொலாம்.

தசரதன் புறப்பாடு

பொய்கை அம் கமலக் கானில்
        பொலிவது ஓர் அன்னம் என்ன,
கைகயர் வேந்தன் பாவை,
        கணிகையர் ஈட்டம் பொங்கி
ஐ-இரு நூறு சூழ,
        ஆய் மணிச் சிவிகைதன்மேல்,
தெய்வ மங்கையரும் நாண,
        தேன் இசை முரல, போனாள்.

விரி மணித் தார்கள் பூண்ட
        வேசரி வெரிநில் தோன்றும்
அரிமலர்த் தடங்கண் நல்லார்
        ஆயிரத்து இரட்டி சூழ,
குருமணிச் சிவிகைதன்மேல்,
        கொண்டலின் மின் இது என்ன,
இருவரைப் பயந்த நங்கை
        யாழ் இசை முரல, போனாள்.

வெள் எயிற்று இலவச் செவ்வாய்
        முகத்தை வெண் மதியம் என்று,
கொள்ளையின் திரள் வான் மீன்கள்
        குழுமிய அனைய ஊர்தி,
தெள் அரிப் பாண்டிற் பாணிச்
        செயிரியர் இசைத் தேன் சிந்த,
வள்ளலைப் பயந்த நங்கை,
        வானவர் வணங்க, போனாள்.

நித்திய நியமம் முற்றி,
நேமியான் பாதம் சென்னி
வைத்த பின், மறை வல்லோர்க்கு
வரம்பு அறு மணியும், பொன்னும்,
பத்தி ஆன் நிரையும், பாரும்,
பரிவுடன் நல்கி, போனான்—
முத்து அணி வயிரப் பூணான்,
மங்கல முகிழ்த்த நல் நாள்.

உழுந்து இட இடம் இலை உலகம் எங்கணும்,
அழுந்திய உயிர்க்கு எலாம் அருட்கொம்பு ஆயினான்
எழுந்திலன்; எழுந்து இடைப் படரும் சேனையின்
கொழுந்து போய்க் கொடி மதில் மிதிலை கூடிற்றே!

மிதிக்க நிமிர் தூளியின் விளக்கம் அறு மெய்யை,
சுதைக் கண் நுரையைப் பொருவு தூசுகொடு, தூய்தா
உதிர்த்தனர், இளங் குமரர், ஓவியரின்; ஓவம்
புதுக்கினர் என, தருண மங்கையர் பொலிந்தார்.

நஞ்சினும் கொடிய நாட்டம்
அமுதினும் நயந்து நோக்கி
செஞ்செவே கமலக் கையால்
தீண்டலும், நீண்ட கொம்பும்,
தம் சிலம்பு அடியில் மென் பூச்
சொரிந்து உடன் தாழ்ந்த என்றால்,
வஞ்சிபோல் மருங்குலார்மாட்டு
யாவரே வணங்கலாதார்?

'போர்' என்ன வீங்கும் பொருப்பு அன்ன
பொலன் கொள் திண் தோள்
மாரன் அனையான், மலர் கொய்து இருந்-
தானை, வந்து ஓர்

கார் அன்ன கூந்தல், குயில் அன்னவள்,
கண் புதைப்ப.
'ஆர்?' என்னலோடும், அனல் என்ன
அயிர்த்து உயிர்த்தாள்.

செய்யில் கொள்ளும் தெள் அமுதச் செஞ் சிலை ஒன்று
கையில் பெய்யும் காமனும் நாணும் கவினர், தம்
மையல் பேதை மாதர் மிழற்றும் மழலைச் சொல்,
தெய்வப் பாடல் சொல் கலை என்ன, தெரிவாரும்;

ஆறு எலாம் கங்கையே ஆய; ஆழிதாம்,
கூறு பாற் கடலையே ஒத்த; குன்று எலாம்
ஈறு இலான் கயிலையே இயைந்த; என் இனி
வேறு நாம் புகல்வது, நிலவின் வீக்கமே?

இராமன் உலா

மான்இனம் வருவ போன்றும்,
மயில்இனம் திரிவ போன்றும்,
மீன்இனம் மிளிர வானில்
மின்இனம் மிடைவ போன்றும்,
தேன்இனம் சிலம்பி ஆர்ப்ப,
சிலம்புஇனம் புலம்பி ஏங்க,—
பூ நனை கூந்தல் மாதர்—
பொம்மெனப் புகுந்து, மொய்த்தார்.

பள்ளத்துப் பாயும் நல் நீர்
அனையவர், பானல் பூத்த
வெள்ளத்தும் பெரிய கண்ணர்,
மென் சிலம்பு அலம்ப, மென் பூத்

தள்ள, தம் இடைகள் நோவ,
தமை வலித்து, ‘ அவன்பால் செல்லும்
உள்ளத்தைப் பிடித்தும் நாம் ’ என்று,
ஓடுகின்றாரும் ஒத்தார்.

வீதிவாய்ச் செல்கின்றான்போல்,
விழித்து இமையாது நின்ற
மாதரார் கண்களூடே
வாவும் மான் தேரில் செல்வான்,
யாதினும் உயர்ந்தோர், தன்னை,
‘யாவர்க்கும் கண்ணன்’ என்றே
ஓதிய பெயர்க்குத் தானே
உறு பொருள் உணர்த்திவிட்டான்.

மைக் கருங் கூந்தல், செவ்வாய்,
வாள் நுதல் ஒருத்தி உள்ளம்
நெக்கனள் உருகுகின்றாள்,
‘நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன்; போகா வண்ணம்,
கண் எனும் புலம் கொள் வாயில்
சிக்கென அடைத்தேன்; தோழி!
சேருதும் அமளி’ என்றாள்.

களிப்பன, மதர்ப்ப, நீண்டு
கதுப்பினை அளப்ப, கள்ளம்
ஒளிப்பன, வெளிப்பட்டு ஓடப்
பார்ப்பன, சிவப்பு உள் ஊறி
வெளுப்பன, கறுப்ப, ஆன
வேல்கணாள் ஒருத்தி, உள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள்,
வெதுப்பொடு கோயில் புக்காள்

தோள் கண்டார், தோளே கண்டார்;
தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார், தாளே கண்டார்;
தடக் கை கண்டாரும், அஃதே;
வாள் கொண்ட கண்ணார் யாரே,
வடிவினை முடியக் கண்டார் ?—
ஊழ் கொண்ட சமயத்து அன்னான்
உருவு கண்டாரை ஒத்தார்.

ஒப்பனை

அமிழ் இமைத் துணைகள், கண்ணுக்கு
அணி என அமைக்குமாபோல்,
உமிழ் சுடர்க் கலன்கள், நங்கை
உருவினை மறைப்பது ஓரார்,
அமிழ்தினைச் சுவை செய்தென்ன,
அழகினுக்கு அழகு செய்தார்—
இமிழ் திரைப் பரவை ஞாலம்
ஏழைமை உடைத்து மாதோ !

நெய்வளர் விளக்கம் ஆட்டி,
நீரொடு பூவும் தூவி,
தெய்வமும் பராவி, வேத
பாரகர்க்கு ஈந்து, செம்பொன்
ஐயவி நுதலில் சேர்த்தி,
ஆய் நிற அயினி சுற்றி,
கை வளர் மயில் அனை
வலம் செய்து, காப்பும் இட்டார்.

அச்சு என நினைத்த முதல் அந்தணன் நினைந்தான்:
'பச்சை மலை ஒத்த படிவத்து அடல் இராமன்,
நச்சுடை வடிக் கண் மலர் நங்கை இவள் என்றால்,
இச் சிலை கிடக்க; மலை ஏழையும் இறாதோ?'

எய் வளை வில் ஏற்றதும், இறுத்ததும் உரைத்தும்,
மெய் விளைவு இடத்து, முதல் ஐயம் விடல் உற்றாள்,
ஐயனை, அகத்து வடிவே அல, புறத்தும்,
கை வளை திருத்துபு கடைக் கணின் உணர்ந்தாள்.

கருங் கடை நெடுங் கண் ஒளி யாறு நிறை கண்ணப்
பெருங் கடலின் மண்ட, உயிர் பெற்று இனிது உயிர்க்கும்,
அருங் கலன் அணங்கு-அரசி, ஆர் அமிழ்து அனைத்தும்
ஒருங்கு உடன் அருந்தினரை ஒத்து, உடல் தடித்தாள்.

சீதா கல்யாணம்

தோரணம் நடுவாரும், தூண் உறை பொதிவாரும்,
பூரண குடம் எங்கும் புனை துகில் புனைவாரும்,
கார் அணி நெடு மாடம் கதிர் மணி அணிவாரும்,
ஆரண மறைவாணர்க்கு இன் அமுது அடுவாரும்,

தேர்மிசை வருவாரும், சிவிகையில் வருவாரும்,
ஊர்தியில் வருவாரும், ஒளி மணி நிரை ஓடைக்
கார்மிசை வருவாரும், கரிணியில் வருவாரும்.
பார்மிசை வருவாரும், பண்டியில் வருவாரும்.

மன்றலின் வந்து, மணத் தவிசு ஏறி
வென்றி நெடுந் தகை வீரனும், ஆர்வத்து
இன் துணை அன்னமும், எய்தி இருந்தார்;
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்.

கோமகன் முன் சனகன், குளிர் நல் நீர்,
'பூமகளும் பொருளும் என, நீ என்
மாமகள் தன்னொடும் மன்னுதி' என்று,
தாமரை அன்ன தடக் கையின், ஈந்தான்.

வெய்ய கனல் தலை வீரனும், அந் நாள்,
மை அறு மந்திரம் மும்மை வழங்கா,
நெய் அமை ஆவுதி யாவையும் நேர்ந்தே,
தையல் தளிர்க் கை தடக் கை பிடித்தான்.

இடம்படு தோளவனோடு, இயை வேள்வி
தொடங்கிய வெங் கனல் சூழ்வரு போதின்,
மடம்படு சிந்தையள், மாறு பிறப்பின்,
உடம்பு உயிரைத் தொடர்கின்றதை ஒத்தாள்.

அந்தணர் ஆசி, அருங் கல மின்னார்
தந்த பல்லாண்டு இசை, தார் முடி மன்னர்
வந்தனை, மாதவர் வாழ்த்து ஒலியோடு
முந்திய சங்கம் முழங்கின மாதோ.

வானவர் பூ மழை, மன்னவர் பொன் பூ,
ஏனையர் தூவும் இலங்கு ஒளி முத்தம்,
தான் நகு நாள் மலர், என்று இவை தம்மால்,
மீன் நகு வானின் விளங்கியது, இப்பார்.

ஆர்த்தன பேரிகள்; ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான்மறை; ஆர்த்தனர் வானோர்;
ஆர்த்தன பல்கலை; ஆர்த்தன பல்லாண்டு;
ஆர்த்தன வண்டுஇனம்; ஆர்த்தன வேலை.

நூற் கடல் அன்னவர் சொற் கடன் நோக்கி,
மாற் கடல் பொங்கும் மனத்தவளோடும்,
கார்க் கடல்போல் கருணைக்கடல் பண்டைப்
பாற்கடல் ஒப்பது ஓர் பள்ளி அணைந்தான்.



★



பங்கஜம் பிரின்டர்ஸ், கணேஷ் நகர், புதுக்கோட்டை.